BRAMPTON

**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

# ப்ராம்ப்ட்டன் நகரில் ஜூன் மாதமானது பூங்காக்கள் மற்றும் பொழுதுபோக்குகளுக்கான மாதம் மற்றும் மூத்த குடிமக்களுக்கான மாதம் ஆகும்!

ப்ராம்ப்ட்டன், ON (ஜூன் 1, 2022) – ப்ராம்ப்ட்டன் நகரமானது ஜூன் மாதத்தை பூங்காக்கள் மற்றும் பொழுதுபோக்குகளுக்கான மாதம் மற்றும் மூத்த குடிமக்களுக்கான மாதம் எனக் கொண்டாடுகிறது; இதில் சிறப்பு நிகழ்ச்சிகள், செயல்பாடுகள் மற்றும் இலவச நிகழ்ச்சிகள் ஆகியவை அடங்கும்.

மாதம் முழுக்கவுமாக, நகர நிர்வாகத்தினால் உபசரிப்பு வழங்கப்படும் வேடிக்கை நிறைந்த நிகழ்ச்சிகளில் பங்கெடுங்கள்:

**தேசிய சுகாதாரம் மற்றும் உடற்பொருத்த நாள் – சனிக்கிழமை, ஜூன் 4, காலை 10 மணி முதல் 12 மணி வரை**

ஃபிட்னஸ் ஸ்கேவெஞ்சர் வேட்டை, திறந்தவெளி ஜூம்பா(™) வகுப்பு மற்றும் ஸ்வெட் அண்ட் ஃபெட் கார்டியோ கிளாஸ் (Sweat and Fete cardio class) செய்முறை விளக்கத்தில் பங்கேற்று, சிங்க்வாகவ்சி பூங்காவில் உள்ள உடற்பயிற்சி மற்றும் ஆரோக்கிய கூண்டுகளில் தேடிக்கண்டறியுங்கள். முதல் 150 பங்கேற்பாளர்கள், ப்ராம்ப்ட்டன் பொழுதுபோக்கு மையங்களில் 10 நாள் உடற்பயிற்சி உறுப்பினர் சோதனை முயற்சிக்காக, பரிசுகளை மீட்டுகொள்ளக்கூடிய கூப்பன் பெறுவார்கள். பதிவு செய்வது தேவையில்லை. விபரங்களுக்கு இங்கு க்ளிக் செய்யவும்.

**மூத்தகுடிமக்கள் கோடைப்பருவ நிகழ்ச்சிக்கு பதிவு செய்தல் – ஜூன் 6, திங்கட்கிழமை துவங்குகிறது**

மூத்தகுடிமக்கள் மையத்தின் உறுப்பினர் சேர்க்கை பாப் கால்லஹன் ஃப்ளவர் சிட்டி (Bob Callahan Flower City) மூத்த குடிமக்கள் மையத்தில் மீண்டும் துவங்குகிறது. அமர்வுகளுக்கான நிகழ்ச்சிக்கு பதிவு செய்தல் ஜூன் 6 ஆம் தேதி துவங்குகிறது மற்றும் நிகழ்ச்சிகள் ஜூலை 4 ஆம் தேதி துவங்குகின்றன. விபரங்களுக்கு இங்கு க்ளிக் செய்யவும்.

**மூத்தகுடிமக்கள் வசந்த விழா – வெள்ளிக்கிழமை, ஜூன் 17, மதியம் 12 மணி முதல் 3 மணி வரை**

55+ வயது கொண்ட ப்ராம்ப்ட்டன் குடியிருப்புவாசிகள் மற்றும் பராமரிப்பாளர்கள் செஞ்சுரி கார்டன்ஸ் பொழுதுபோக்கு மையத்தில் மதிய உணவு மற்றும் நடன நிகழ்வுக்கு அழைக்கப்படுகின்றனர். இந்த நிகழ்வை அமிக்கா பீல் வில்லேஜ் (Amica Peel Village) பெருமையுடன் வழங்குகிறது. பதிவு செய்தல் அவசியம். விபரங்களுக்கும் பதிவு செய்வதற்கும் இங்கு க்ளிக் செய்யவும்.

**சர்வதேச யோகா தினம் – வியாழக்கிழமை, ஜூன் 21, மாலை 7 மணி முதல் 9 மணி வரை**

மவுண்ட் ப்ளெசண்ட் சமுதாய மையத்தில் இலவச திறந்தவெளி யோகா வகுப்பில் சேருங்கள். பங்கேற்பாளர்கள் கெட்டுப்போகாத உணவுப் பொருளை நன்கொடையாக அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்; மற்றும், புல்தரை மீது பயன்படுத்துவதற்கு தங்களின் சொந்த, வழுக்காத, யோகா பாய் அல்லது துவாலை கொண்டு வர வேண்டும். முதல் 100 பங்கேற்பாளர்கள் ப்ராம்ப்ட்டன் பொழுதுபோக்கு மையங்களில் 10 நாள் உடற்பயிற்சி உறுப்பினர் சோதனைமுயற்சிக்காக பரிசுகளை மீட்டுக்கொள்ளக்கூடிய கூப்பனைப் பெறுவார்கள். பதிவு தேவையில்லை. விபரங்களுக்கு இங்கு க்ளிக் செய்யவும்.

**இலவசமாக வந்து செல்லும் நிகழ்ச்சிகள் -மாதம் முழுக்கவும்**

ஜூன் மாதமானது, பூங்காக்கள் மற்றும் பொழுதுபோக்குகளுக்கான மாதம் மற்றும் ஜூன் மாதம் முதியோர்களுக்கான மாதமாக கொண்டாடுவதற்காக இலவசமாக வந்து செல்லும் நிகழ்ச்சிகளை நகர நிர்வாகம் வழங்கும். பொழுதுபோக்கு மையங்களுக்குச் செல்வதற்கு, முன் பதிவு செய்வது தேவையில்லை, இருப்பினும், முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் பார்வையாளர்கள் நிகழ்ச்சிகளுக்கு முன்கூட்டியே அனைத்து சேவைகளுக்கும் பதிவு செய்துகொள்ள பரிந்துரைக்கப்படுகிறார்கள்.

ஜூன் மாதம் பூங்காக்கள் மற்றும் பொழுதுபோக்கிற்காக இலவசமாக வந்து செல்லும் நிகழ்ச்சிகளுக்கான மாதம் என்பது பற்றிய விபரங்களுக்கு இங்கு க்ளிக் செய்யவும்.

ஜூன் மாதம் மூத்தகுடிமக்கள் இலவசமாக வந்து செல்லும் நிகழ்ச்சிகளுக்கான மாதம் என்பது பற்றிய விபரங்களுக்கு இங்கு க்ளிக் செய்யவும்.

**பூங்காக்கள் மற்றும் பொழுதுபோக்கு வழித்தடங்களைத் தேடிக்கண்டறியுங்கள்- மாதம் முழுக்கவும்**

பூங்காக்கள் மற்றும் பொழுதுபோக்கு வழிதடங்களில் தாவிக்குதியுங்கள், சைக்கிளில் செல்லுங்கள், நடந்து செல்லுங்கள். நகர நிர்வாகமானது ப்ராம்ப்ட்டன் நகரம் முழுக்கவுமாக வழிகாட்டுதலுடன் கூடிய கற்களால் நன்கு வேயப்பட்ட 40 கிலோமீட்டருக்கும் அதிக நீளம் கொண்ட பொழுதுபோக்கு தடங்களை அமைத்துள்ளார்கள். விபரங்களுக்கு இங்கு க்ளிக் செய்யவும்.

**அறிஞர் கூற்றுக்கள்**

"ப்ராம்ப்ட்டனில், ஜூன் மாதம் பூங்காக்கள் மற்றும் பொழுதுபோக்குகளுக்கான மாதம் ஆகும் மற்றும் முதியோர்களுக்கான மாதமும் ஆகும்! ப்ராம்ப்ட்டன் ஒரு ஆரோக்கியமான மற்றும் பாதுகாப்பான நகரம், மேலும் எங்கள் சமூகத்தில் பங்கேற்கவும் கொண்டாடவும் அனைவரையும் ஊக்குவிக்கிறேன். ஆரோக்கியமாகவும் சுறுசுறுப்பாகவும் இருங்கள், வேடிக்கையை அனுபவியுங்கள்."

- பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்

"ப்ராம்ப்ட்டன் நகரமே!, உங்களுக்கான மகிழ்ச்சியான பூங்காக்கள் மற்றும் பொழுதுபோக்கு மாதம் மற்றும் மூத்த குடிமக்களுக்கான மாதம் இதோ! ப்ராம்ப்ட்டன் எல்லா வயதினரும், திறமையும் உள்ளவர்கள் வாழ, வேலை செய்ய மற்றும் விளையாடுவதற்கான சிறந்த இடமாகும். இந்த மாதத்திற்கான எங்கள் நிகழ்ச்சித் திட்டங்கள் அனைத்தையும் தேடி ஆராய்ந்து, எங்கள் நகரத்தின் அழகிய பூங்காக்கள் மற்றும் பொழுதுபோக்கு பாதைகளில் திறந்தவெளி காட்சிகளை அனுபவிக்க மறக்காதீர்கள்."

*- ரொவீனா சான் ட்டோஸ், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 1 & 5; தலைவர், சமுதாய நல சேவைகள் துறை,* ப்ராம்ப்ட்டன் நகரம்

"பூங்காக்கள் மற்றும் பொழுதுபோக்குகளுக்கன மாதம் மற்றும் மூத்தகுடிமக்களுக்கான மாதத்தின் ஒரு பகுதியாக இந்த ஜூன் மாதத்தில் எங்கள் சமூகத்தின் உடல்நலம் மற்றும் ஆரோக்கியத்திற்காக ப்ராம்ப்ட்டன் ஏராளமான வாய்ப்புகளைக் கொண்டிருக்கிறது.

கொண்டாட்டத்தில் பங்கெடுக்க, எங்கள் சிறப்பு நிகழ்வுகள், செயல்பாடுகள் மற்றும் இலவச நிரலாக்கங்களில் சேரவும்."

*- சார்மேய்ன் வில்லியம்ஸ், நகர கவுன்சிலர், வார்டுகள் 7 & 8; துணைத்தலைவர், சமுதாய நல சேவைகள் துறை,* ப்ராம்ப்ட்டன் நகரம்

"சமூக நலனுக்கான வாய்ப்புகளை வழங்குவதில் நகரப் பணியாளர்கள் அர்ப்பணிப்பு கொண்டுள்ளனர். ஜூன் மாதத்தை பூங்காக்கள் மற்றும் பொழுதுபோக்குகளுக்கான மாதமாகவும் மூத்தகுடிமக்களுக்கான மாதமாகவும் கொண்டாட இந்த மாத நிகழ்வுகளுக்கு பதிவு செய்து கொள்ளவும்."

*- பால் மோர்ரிஸன், இடைக்கால தலைமை நிர்வாக அதிகாரி,* ப்ராம்ப்ட்டன் நகரம்

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, மற்றும் Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். www.brampton.ca இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்

**ஊடக தொடர்பு**
ப்ராம்ப்ட்டன் நகர மன்முக கலாச்சார ஊடகம்
multiculturalmedia@brampton.ca